**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**C.C. 433/2025**
**Prosecution Witness : 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ஜெய் கணேஷ்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. கருப்பையா** | **Calling** | : | **சார்பு ஆய்வாளர், கொடைக்கானல் காவல்நிலையம்** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **40** |
| | | | **Dated** | : | **24.03.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜர்.**

அ.சா. 4 (பட்டியல் சாட்சி 13), **திரு. ஜெய் கணேஷ்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :–**

நான் தற்போது, திண்டுக்கல், கொடைக்கானல் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.01.2023 ம் தேதி திண்டுக்கல் தாலுகா காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது, காவல்நிலையத்தில் பணிபுரிந்த தலைமை காவலர் திரு.வேலுமணி என்பவர் திண்டுக்கல் காவல்நிலைய குற்ற எண். 66/2023, சட்டப்பிரிவுகள் 279, 337 இ.த.ச. வழக்கு பதிவு செய்து என் பார்வைக்கு வைத்தார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அன்றைய தினமே திண்டுக்கல் – திருச்சி

ரோடு, NGO காலனி அரசு மதுபானக்கடை பிரிவு அருகே சம்பவ இட சாட்சிகளான பிரபு மற்றும் மணி ஆகியோர் முன்னிலையில் மதியம் 14.30 மணிக்கு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மேற்படி பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்படுகின்றன.** அதன்பின்பு சம்பவ இடம் மற்றும் பிற சாட்சிகளான சுந்தர் ராஜன், லோகநாதன், பிரபாகரன், ஜோசப், தலைமை காவலர் திரு.வேலுமணி ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் காயம்பட்ட குமார் மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி 01.02.2023ம் தேதி மதியம் 12.50 மணிக்கு இறந்துவிட்டதாக பிற்பகல் 14.40 மணிக்கு கிடைக்கப்பெற்ற தகவலின்படி வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இ.த.ச.வில் இருந்து, 279, 304(A) இ.த.ச. வாக சட்டப்பிரிவு மாறுதல் செய்து அறிக்கை சமர்பித்தேன். **மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இறந்துபோன குமார் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்யவேண்டி மதுரை, மருத்துவக்கல்லூரி சட்டம் சார்ந்த மருத்துவ பேராசிரியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டது. அதன்பின்பு 02.02.2023ம் தேதி காலை 11.00 மணிக்கு மதுரை, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிரேத விசாரணை ஆரம்பிக்கப்பட்டு 13.00 மணிக்கு முடிக்கப்பட்டது. **மேற்படி விபத்து பதிவேடு அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன்பிறகு பிரேதத்தை நல்லடக்கம் செய்ய அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. **மேற்படி பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்கொண்டு விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

யார் புகார் கொடுத்தது என்று கேட்டால், பிரபு என்பவர் 28.01.2023 ம் தேதி கொடுத்தார். புகாரில் தேதி குறிப்பிடப்பட்டு உள்ளதா என்றால் இல்லை. புகார் மனுவில் அசா. 1 னிடம் கையொப்பம் மட்டும் பெற்றுக் கொண்டு மற்ற விபரங்களை நாங்களே பூர்த்தி செய்து கொண்டோம் என்றால் இல்லை. **"புகார் மனுவில் நான் உடனிருந்து அவரை கவனித்துக் கொண்டதால் இன்று திண்டுக்கல் தாலுகா காவல்நிலையம் வந்து புகார் கொடுக்கிறேன்",** என்ற வாசகம் இடைச்சொருகலாக பின்னீடு சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகார் மனுவில் 27.01.2023 என்ற தேதி 28 ஆக திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தது 27.01.2023 ம் தேதி காலை 08.30 மணி. திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து மேற்படி விபத்து பற்றி எனக்கு தகவல் வந்ததா என்றால், எனக்கு சரியாக நினைவில்லை. மேற்படி விபத்தில் காயம்பட்டவர் எந்த தேதியில், எங்கு இறந்தார் என்றால், 01.02.2023 ம் தேதி மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனையில் இறந்தார். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அன்றைய தினமே நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனையில் இருந்து பிற்பகல் 14.40 மணிக்கு எனக்கு காயம்பட்டவர் இறந்துவிட்டதாக தகவல் வந்தது. இந்த வழக்கு விபத்திற்கு எதிரி காரணம் இல்லை என்றாலும், இந்த வழக்கின் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் உள்ளிட்ட அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டவை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் இறந்துபோன

நபருக்கு விபத்து காப்பீடு கிடைக்க வேண்டும் என்பதற்காக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 24.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA

Digitally signed by V DEEPA
Date: 2026.03.24 14:51:32 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.